# இலங்கை பொதுஜனப் பெரமுனக் கட்சியின் (SLPP) தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்ற உறுப்பினராக திரு.தம்மிக்க பெரேரா அவர்களின் நியமனத்தின் அரசியலமைப்பு ரீதியான தன்மை தொடர்பாக
# மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் அறிக்கை

**10 ஜூன் 2022:** திரு.பசில் ராஜபக்ச அவர்களின் பதவி விலகலினால் வெற்றிடமாக வந்த பாராளுமன்றத்திற்கான தேசிய பட்டியல் ஆசனத்தை நிரப்புவதற்கு இலங்கை பொதுஜனப் பெரமுனக் கட்சி (SLPP) திரு.தம்மிக்க பெரேரா அவர்களை நியமித்தமை குறித்தான பல்வேறு ஊடக அறிக்கைகளினால் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (மா.கொ.நி) கரிசனை கொண்டுள்ளது. ஊடக அறிக்கைகளின் படி, திரு.தம்மிக்க பெரேரா சில நாட்களுக்கு முன் வரை இலங்கை பொதுஜனப் பெரமுனக் கட்சியின் ஓர் உறுப்பினரல்ல என்பதையும் மற்றும் அரசியலமைப்பின் உறுப்புரை 99 ‘அ’ (“தேசியப் பட்டியல்”) அல்லது ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் பொதுஜனப் பெரமுனக் கட்சியால் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் மாவட்ட பட்டியல்களில், பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுவதற்குத் தகுதியான ஆட்களின் பட்டியலில், அவரது பெயர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை, என்பதையும் மா.கொ.நி கவனத்தில் கொள்கிறது.

பொருளாதாரத்திலுள்ள பல்வேறு முக்கியமான துறைகளை உள்ளடக்கியதாக பல்வேறு பொது மற்றும் தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனங்களில் திரு.தம்மிக்க பெரேரா வர்த்தகரீதியான நலன்களைக் கொண்டுள்ளார். ஒரு சட்டமன்ற உறுப்பினராகவும் மற்றும் ஓர் எதிர்கால அமைச்சராகவும், திரு.தம்மிக்க பெரேரா அவர்களால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள், இந்தத் துறைகள் மற்றும் நிறுவனங்கள் மீது ஒரு முக்கியமான மற்றும் நேரடியான தாக்கங்களைக் கொண்டிருக்கும் என்பதோடு, அவை ஒரு நேரடியான நலன் முரண்பாடுகளையும் உருவாக்குகின்றன. எப்படியாகிலும், அவர் கணிசமான நிதி ரீதியான நன்மைகளை ஈட்டுவதற்கான வாய்ப்புகளைக் கொண்டிருப்பதினால், நிறுவனங்களில் அவர் பேணும் பதவிநிலைகளிலிருந்து திரு.தம்மிக்க பெரேரா விலகுவதால் மட்டும் இந்த நலன் முரண்பாடுகள் வெறுமனே தீர மாட்டாது. ஆகஸ்ட் 2020 இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் மக்கள் வாக்களித்திருக்கும் போது, பாராளுமன்றத்திற்கு தற்போது திரு.பெரேரா நியமிக்கப்படுவதன் பின்

மறைந்துள்ளவற்றை இலங்கைப் பிரஜைகள் ஏன் தெரிந்திருக்க வேண்டுமென்பதை இந்தச் சந்தர்ப்ப சூழ்நிலைகள் மேலும் முக்கியமானதாக ஆக்குகின்றன. மேலும், திரு.பெரெரா கொண்டுள்ள வர்த்தக நலன் உள்ள வியாபாரங்கள் ''அரச அல்லது பொதுக் கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்ட அல்லது அவற்றின் சார்பாக மேற்கொள்ளப்பட்ட'' ஒப்பந்தங்களிற்குள் பிரவேசிப்பின் அல்லது தொடரின். அது அரசியலமைப்பின் உறுப்புரை 91(1)(உ) இன் ஒரு மீறலாக அமைவதற்கு முடியும்.

மாவட்ட நியமனப் பத்திரங்களொன்றில் அல்லது ஒரு தேசியக் கட்சி அல்லது சுயாதீனக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட தேசியப் பட்டியலில் பெயர் உள்ளடக்கப்பட்டிருக்கும் நபரொருவர் மாத்திரமே, பாராளுமன்ற அங்கத்துவத்தில் ஏற்படும் அந்த ஒரு வெற்றிடத்தை நிரப்புவதற்கு நியமிக்கப்படுவதற்கான உரித்துடையவர் என்பது, அரசியலமைப்பின் விதிகளின் பிரகாரம் மா.கொ.நி இன் நிலைப்பாடாகவுள்ளது. மா.கொ.நி இந்த நிலைப்பாட்டை தொடர்ச்சியாக பேணியதுடன், அவ்வாறான நியமனங்கள் முன்னர் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்களின் போது, நீதிமன்றத்தில் அத்தகைய பல்வேறு நியமனங்களை சவாலுக்கு உட்படுத்தியது உட்பட, கரிசனைகளையும் எழுப்பியுள்ளது. 2016 இல், ஐக்கிய தேசியக் கட்சியால் மேற்கொள்ளப்பட்ட திரு. சரத் பொன்சேகா அவர்களின் தேசியப் பட்டியல் நியமனத்தை சவாலுக்குட்படுத்தி மா.கொ.நி வழக்கொன்றைத் தாக்கல் செய்தது. அவ்வழக்கில், உயர் நீதிமன்றம் வழக்கைத் தொடர்வதற்கு அனுமதி மறுத்தது, ஆனாலும் காரணத்துடன் பொருண்மைக் கட்டளை வழங்கப்படவில்லை. ஜனவரி 2020, இவ்வாறானதொரு அடிப்படையில் திரு.சமன் ரத்னப்பிரிய மற்றும் பசில் ராஜபக்ச ஆகியோரின் நியமனங்களை மா.கொ.நி விமர்சனம் செய்தது.

ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி/மக்கள் கூட்டணி என்பன பாராளுமன்றத்திற்கு இவ்வாறான நியமனங்களை முன்னைய சந்தர்ப்பங்களில் மேற்கொண்டார்கள் என்பதை மா.கொ.நி கவனத்தில் கொள்கிறது. இந்த அரசியல் கட்சிகள் 1981 ஆம் ஆண்டின் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம் இனது பிரிவு 64 (5) இன் பின்னால் ஒளிந்து கொள்கின்றன, இது அவ்வாறான ஒரு வெற்றிடத்தை நிரப்புவதற்கு அரசியல் கட்சியின் ''எந்த உறுப்பினரையும்'' நியமிப்பதற்கு அவர்களுக்கு அதிகாரமளிக்கிறது. பாராளுமன்ற தேர்தல்கள் சட்டத்தின் குறித்த ஏற்பாடுகள் அரசியலமைப்பின் தெளிவான மற்றும் ஐயமின்றிய ஏற்பாடுகளை, குறிப்பாக உறுப்புரை 99 'அ' மற்றும் உறுப்புரை 101(ஏ) என்பவற்றை மீறுகின்றன என்பதை மா.கொ.நி குறிப்பிடுகிறது. பிரிவு 64 (5), தெளிவான முறையில் அரசியலமைப்பு ரீதியானதல்லாதாக இருந்தபோதிலும், பாராளுமன்றத்தினால் சட்டவாக்கம் நிறைவேற்றப்பட்ட பின் அதன் அரசியலமைப்பு ரீதியான தன்மையை உயர் நீதிமன்றம் மறுசீராய்வதற்கு இலங்கை அரசியலமைப்பு அனுமதிக்காத ஒரேயொரு காரணத்தால் மட்டும், அது செல்லுபடியானதாக இன்னமும் இருக்கின்றது.

மேலும், சம்பந்தப்பட்ட தேர்தலில் நியமிக்கப்படாத ஒருவரை, அரசியல் கட்சியொன்றின் ''எந்த உறுப்பினரையும்'' நியமிக்கும் குறித்த நடைமுறை, மக்களின் இறையாண்மையின் பகுதியான மக்களின் வாக்குரிமையை மீறுகிறது. அரசியலமைப்பு தெரிவிக்குமாற்போல் உண்மையில் குடியரசில் இறைமை மக்களிற்குரியது எனின், அரசியல் கட்சி யாரை பாராளுமன்றத்திற்கு நியமிப்பதற்கு உத்தேசிக்கின்றது என்பதை மக்கள் தேர்தலொன்றுக்கு முன்பாக அறிந்திருத்தல் வேண்டும்.

வெற்றிடங்களை நிரப்புவதற்காக தாங்கள் விரும்பும் எவரொருவரையும் நியமிப்பதற்கு அரசியல் கட்சிகளை அனுமதிப்பது, அத்நோக்கத்திற்காக உருவமைக்கப்பட்ட மக்களின் வாக்குரிமையின்

பெறுமதியை அநாவசியமான விதத்தில் குறைமதிப்பிடுவதுடன் அரசியல் கட்சிகளின் தலைமைத்துவத்தின் அதிகாரத்தை தன்னிச்சையான வகையில் ஊதிப் பெருப்பிக்கின்றன. தேசியப்பட்டியலின் அரசியலமைப்பு ரீதியான நோக்கம், தேர்தல் செய்முறைகள் மூலம் இல்லாது வேறுவகையிலும் கூட பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் காணாத மக்கள் பிரிவுகள் மற்றும் சிறிய சிறுபான்மையினரின் கருத்துக்களின் பிரதிநதித்துவத்தை உறுதிப்படுத்துவதாகும். அது ஏதேனும் அரசியல் கட்சியின் குறுகிய சுயநலன்களுக்கு அல்லது தனிப்பட்ட ஒருவரின் இலட்சியங்களுக்கு வசதியளிப்பதற்கானதல்ல

எனவே, அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கும் மற்றும் மக்களின் வாக்குரிமைக்கும் மதிப்பளிப்பதற்கு இலங்கை பொதுஜன பெரமுனக் கட்சி மற்றும் ஏனைய அனைத்து அரசியல் கட்சிகளிடம் மா.கொ.நி வேண்டிக் கொள்கிறது. அத்தோடு, அரசியலமைப்பின் உறுப்புரை 99 ‘அ’ மற்றும் உறுப்புரை 101 (ஏ) என்பவற்றுடன் அது இணங்கிச் செல்கிறதா என்பதிலான ஏதேனும் சந்தேகத்தை நீக்குவதற்கு பாராளுமன்ற தேர்தல்கள் சட்டத்தின் பிரிவு 64 (5) ஐ திருத்துவதற்கு, பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளிடமும் மா.கொ.நி வேண்டிக் கொள்கிறது.